மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் சார்பில்

தமிழ்நாட்டுக்கு திட்டங்களும் இல்லை - அடுப்பு எரிக்க கேஸ் சிலிண்டரும் இல்லை -

தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் NDA அரசையும் அதன் கூட்டணியையும் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்!

மதுரை வடக்கு மாவட்ட கழகச் செயலாளர் - அமைச்சர் பி.மூர்த்தி அறிவிப்பு!

தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்!

நாள் : 15.03.2026 – நேரம் – காலை: 10.30 மணி

வ. எண்	கழக அமைப்பு – ஒன்றியம்/நகரம்/பகுதி/பேரூர்	கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் இடம்
1.	மதுரை கிழக்கு, மதுரை கிழக்கு வடக்கு, மதுரை கிழக்கு தெற்கு, வண்டியூர்	கடச்சனேந்தல்
2.	மதுரை மேற்கு வடக்கு, கண்ணனேந்தல், திருப்பாலை, ஆனையூர்.	ஆட்டோ நிறுத்தம் அருகில், ஊமச்சிகுளம்.
3.	கொட்டாம்பட்டி கிழக்கு, மேற்கு, கொட்டாம்பட்டி வடக்கு, தெற்கு	கொட்டாம்பட்டி பேருந்து நிலையம்
4.	மேலூர் மேற்கு, மேலூர் வடக்கு, அ.வள்ளாலபட்டி.	அ.வள்ளாலபட்டி மந்தை
5.	மேலூர் கிழக்கு, மேலூர் தெற்கு, மேலூர் நகர்.	தபால் நிலையம் எதிரில் பேங்க் ரோடு, மேலூர்.
6.	அலங்காநல்லூர் கிழக்கு, அலங்காநல்லூர் வடக்கு, பாலமேடு	ஸ்டேட் பேங்க் எதிரில், பாலமேடு.
7.	அலங்காநல்லூர் மேற்கு, தெற்கு, அலங்காநல்லூர் பேரூர், மதுரை மேற்கு	ஸ்டேட் பேங்க் எதிரில், அலங்காநல்லூர்.
8.	வாடிப்பட்டி வடக்கு, வாடிப்பட்டி பேரூர்	ஸ்டேட் பேங்க் எதிரில், வாடிப்பட்டி
9.	வாடிப்பட்டி தெற்கு, சோழவந்தான் பேரூர்	ஸ்டேட் பேங்க் எதிரில், சோழவந்தான்.
10.	பரவை, மதுரை வடமேற்கு கோவில்பாப்பாகுடி, கூடல்நகர், விளாங்குடி, திருப்பரங்குன்றம் வடக்கு	தபால் நிலையம் எதிரில், பாரதி மைதானம், பரவை.
11.	காளவாசல், பழங்காநத்தம், ஜெய்ஹிந்த்புரம், ஜீவாநகர், சோழையழகுபுரம், பைக்காரா, துரைச்சாமிநகர், பெத்தானியாபுரம், சம்பட்டிபுரம்,	குரு தியேட்டர் எதிரில், அண்ணா மெயின் வீதி, பெத்தானியாபுரம்.

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சிகளின் சார்பில் நடைபெறும் இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில், நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, கிளைக் கழகச் செயலாளர்கள் - நிர்வாகிகள், அனைத்து அமைப்புகளில் உள்ள அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் மதச் சார்பற்ற கூட்டணிக் கட்சியைச் சேர்ந்த அனைத்து அமைப்புகளின் நிர்வாகிகள் அனைவரும் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஒன்றிய பாசிச பா.ஜ.க அரசையும் அதற்கு ஒத்து ஊதும் அ.தி.மு.க.வையும் கண்டித்து முழக்கங்களை எழுப்பி ஆர்ப்பாட்டம் செய்திட வேண்டுமென கேட்டுக்கொள்கிறோம்.

அமைச்சர் பி.மூர்த்தி

செயலாளர், மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க.

தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு

மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

ஆதிதிராவிடர் நலக்குழுச் செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. அறிவிப்பு!

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர்/ பொறுப்பாளர்கள் ஒப்புதலோடு தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

விழுப்புரம் தெற்கு மாவட்டம்

தலைவர் - கு.ஓம். சிவசக்திவேல் மாரியம்மன் கோவில் தெரு, ஏனாதிமங்கலம் மற்றும் அஞ்சல், திருவெண்ணெய் நல்லூர் வட்டம் - 607107, விழுப்புரம் மாவட்டம்.

துணைத் தலைவர் - ஏ.கே.எஸ். ராஜேந்திரன் சென்னை மெயின் ரோடு, அய்யூர் அகரம், விக்கிரவாண்டி வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

அமைப்பாளர் - எம்.ஆர். ராஜீவ்காந்தி ஆ.கூடலூர், ஆயந்தூர் அஞ்சல், கண்டாச்சிபுரம் வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) அ. தர்மலிங்கம் மாரியம்மன் கோவில் தெரு, மேலக்காரணை மற்றும் அஞ்சல், விக்கிரவாண்டி வட்டம் - 605202, விழுப்புரம் மாவட்டம். 2) சி.அ. ஏழுமலை 323, பெரிய பாறை தெரு, அம்பேத்கர் நகர், வீரபாண்டி மற்றும் அஞ்சல், கண்டாச்சிபுரம் வட்டம், விழுப்புரம் மாவட்டம். 3) சு. சுகுமார் 24, மாரியம்மன் கோவில் தெரு, விக்கிரவாண்டி, விழுப்புரம் மாவட்டம். 4) கா. ஏழுமலை சிவ நந்திபுரம் தெரு, மெய்யூர் மற்றும் அஞ்சல், திருவெண்ணெய்நல்லூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம். 5) ஏ. முருகையன் குடவக்காரிதெரு, வீரணாம்பட்டு, திருக்கோவிலூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம். 6) வெ. பழனி 3/33, மாரியம்மன் கோவில் தெரு, ராதாபுரம், விக்கிரவாண்டி வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

திருப்பூர் கிழக்கு மாவட்டம்.

தலைவர் - ப. வேலுச்சாமி 14/21, எம்.ஜி.ஆர். நகர், எக்கட்டாம்பாளையம், சாணார்பாளையம் அஞ்சல், சென்னிமலை - 638051, திருப்பூர் மாவட்டம்.

துணைத் தலைவர் - ப. காந்தி 1/180, எம்.காளியபாளையம், மூலனூர் - 638106, திருப்பூர் மாவட்டம்.

அமைப்பாளர் - சு. சக்திவேல் 14/17, பாப்பன்பாளையம், மேட்டுப்பாளையம் அஞ்சல், வெள்ளக்கோவில் - 638111, திருப்பூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) த. சீனிவாசன் 105, மேற்கு வீதி, மணக்கடவு அஞ்சல், தாராபுரம் - 638673, திருப்பூர் மாவட்டம். 2) கே. பொன்னுசாமி 1/675, வெள்ளகரடு செந்தில் நகர் ஸ்கூல் விதி, முதலிபாளையம் சிட்கோ (அ) - 641606, திருப்பூர் மாவட்டம். 3) ப. பெரியசாமி 129/113, மேட்டூர், நத்தப் பாளையம், தூரம்பாடி அஞ்சல் - 638106, திருப்பூர் மாவட்டம். 4) சி. தியாகராஜன் காங்கேயம்பாளையம், காடையூர் அஞ்சல், காங்கேயம் - 638701, திருப்பூர் மாவட்டம். 5) சே. பிரபு சேமான் 7/89, கோவில்பாளையம், சிவன்மலை - 641604, திருப்பூர் மாவட்டம். 6) எஸ். தினகரன் 32, சொரியான் கிணத்துப்பாளையம், வெள்ளக்கோவில் - 638111, திருப்பூர் மாவட்டம்.

திருப்பூர் தெற்கு மாவட்டம்.

தலைவர் - வி. செல்வராஜ் 1/21, அம்பேத்கர் வீதி, ஊஞ்சவேலம்பட்டி அஞ்சல், பொள்ளாச்சி - 642003, திருப்பூர் மாவட்டம்.

துணைத் தலைவர் - கு. முருகன் 77, செல்லம் குடியிருப்பு, காந்தி நகர் - 2, உடுமலைப்பேட்டை - 642154, திருப்பூர் மாவட்டம்.

அமைப்பாளர் - மா. கன்னிமுத்து 3/103, அறிவு நிதி இல்லம், ரங்கபாளையம், பெரியப்பட்டி அஞ்சல், உடுமலைப்பேட்டை - 642201, திருப்பூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) மா. சக்திவேல் 114, மதியழகன் நகர், கணியூர் அஞ்சல், மடத்துக்குளம் - 642203, திருப்பூர் மாவட்டம். 2) ப. லோகுபாண்டியன் 4, காந்தி சந்து - 2, பழனி சாலை, உடுமலைப்பேட்டை - 642126, திருப்பூர் மாவட்டம். 3) கி. பழனிச்சாமி 5/90, கிழக்கு தெரு, சோழமாதேவி, மடத்துக்குளம் - 642113, திருப்பூர் மாவட்டம். 4) வீ. மாரிமுத்து 2/137, கொ. காளியாபுரம், வெள்ளாளபாளையம் அஞ்சல், பொள்ளாச்சி - 642120, திருப்பூர் மாவட்டம். 5) வே. பழனிச்சாமி 4/258ஏ, கலைஞர் நகர், எலையமுத்தூர், உடுமலைப்பேட்டை - 642154, திருப்பூர் மாவட்டம். 6) ஆ. சின்னக்கண்ணன் 13/253, ராஜகணபதி நகர், மாக்கினாம்பட்டி, பொள்ளாச்சி - 642003, திருப்பூர் மாவட்டம்.

திருநெல்வேலி கிழக்கு மாவட்டம்

தலைவர் - எஸ். ராஜேஷ் அம்மன் கோவில் தெரு, நெடுவாழி, இராதாபுரம், திருநெல்வேலி.

துணைத் தலைவர் - எஸ். சுயம்பு கீழத் தெரு, கீக்குளம், திருநெல்வேலி.

அமைப்பாளர் - பி.டி. சேகர் 21/27ஏ, வடக்கு தெரு, நம்பிதோப்பு, திருக்குறுங்குடி அஞ்சல், நாங்குநேரி தாலுக்கா, திருநெல்வேலி.

துணை அமைப்பாளர் - சி. வெற்றிவேல் 5/1, செண்பகராமபுரம், பணகுடி - 627109, திருநெல்வேலி.

திருப்பத்தூர் மாவட்டம்

திருப்பத்தூர் மாவட்டம் மறுசீரமைக்கப்பட்டதால் ஏற்கனவே ஆதிதிராவிடர் நலக்குழு தலைவராக நியமிக்கப்பட்ட சே. குமார் அவர்கள் வேலூர் தெற்கு மாவட்ட நிர்வாகத்தில் வருவதால் அவருக்கு பதிலாக **கு. பழநி** (9, 2வது தெரு, பன்னீர்செல்வம் நகர், புதுமனை, ஆம்பூர் - 635802) அவர்கள் திருப்பத்தூர் மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு தலைவராக நியமிக்கப்படுகிறார்.

இராமநாதபுரம் மாவட்டம்

இராமநாதபுரம் மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு துணை அமைப்பாளராக **அ. பாலமுருகன்** (வீரவனூர், வைரவனேந்தல், பரமக்குடி, இராமநாதபுரம் மாவட்டம்) அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்" ஆ. கிருஷ்ணசாமி, எம்.எல்.ஏ.,
சென்னை - 18 செயலாளர்
நாள்- 12-03-2026. தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு

விழுப்புரம் மாவட்டத்தில் சாலை விபத்து:

உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு ரூ.3 லட்சம் நிதி!

முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, மார்ச். 15- விழுப்புரம் மாவட்டம் மற்றும் வட்டம், சென்னை - கும்பகோணம் தேசிய நெடுஞ்சாலையில் வாணியம்பாளையம் கிராம பேருந்து நிறுத்தம் அருகில் நிகழ்ந்த சாலை விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவியினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

விழுப்புரம் மாவட்டம் மற்றும் வட்டம், சென்னை-கும்பகோணம் தேசிய நெடுஞ்சாலையில், வாணியம்பாளையம் கிராம பேருந்து நிறுத்தம் அருகில் நேற்று முன்தினம் (13.3.2026) காலை 6.00 மணியளவில் விழுப்புரம் மாவட்டம், ப.வில்லியனூர் கிராமத்தைச் சேர்ந்த இருபதுக்கும் மேற்பட்ட நபர்கள் கரும்பு வெட்டும் வேலைக்காக நான்கு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது கோலியனூரிலிருந்து பண்ருட்டி வழியாக எம்.சாண்ட் ஏற்றி வந்த டிப்பர் லாரி ஒன்று எதிர்பாராதவிதமாக நான்கு சக்கர வாகனத்தின் பின்பக்கமாக மோதிய விபத்தில் அந்த வாகனத்தில் பயணம் செய்த சேகர் (வயது 65) என்பவர் உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இந்த விபத்தில் பலத்த காயமடைந்து முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் வீரவேலு (வயது 65) திருமதி செங்கேணி (வயது 58) திருமதி பாக்கியம் (வயது 55) மற்றும் சுதாகர் (வயது 45) ஆகிய நான்கு நபர்களுக்கு சிறப்பு சிகிச்சை வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவரின்குடும்பத்தினருக்கு மூன்று இலட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா 1 இலட்சம் ரூபாயும், இலேசான காயமடைந்தவர்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

தமிழ்நாட்டு மக்களை ஏமாற்ற முடியாது!

அ.தி.மு.க. - பா.ஜனதா சந்தர்ப்பவாத கூட்டணிக்கு மக்கள் பாடம் புகட்டுவார்கள்!

காங்கிரஸ் எஸ்.சி. துறை தலைவர் எம்.பி.ரஞ்சன்குமார் அறிக்கை!

சென்னை,மார்ச்.15-

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் எஸ்.சி. துறை தலைவர் எம்.பி.ரஞ்சன் குமார் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

பிரதமர் மோடிக்கு, தேர்தல் வந்தால் மட்டுமே தமிழ்நாட்டு மக்கள் நினை வுக்கு வருவர். திமுக அரசு விஞ்ஞானப்பூர்வ ஊழலைச் செய்திருப்பதாக ஆதாரமே இன்றி பேசி இருக்கிறார். ஊழலைப் பற்றி பேச மோடிக்கு என்ன யோக்கியதை இருக்கிறது? இந்தியாவில் கொரோனா தொற்று பரவிய போது பி.எம். கேர்ஸை தொடங்கினார். மக்களிடமிருந்து 10 ஆயிரம் கோடி ரூபாய் வரை நிதி குவிந்தது. இந்தப் பணம் எங்கே போனது? மத்திய அரசின் பாரத் திட்டத்தில், ஏலம் விடுதலில் முறைகேடு நடந்திருப்பதாக மத்திய கணக்குத்தணிக்கைக்குழு குறிப்பிட்டதே? விரைவுப் பாதை கட்டுமானத்தில், ஒரு கிலோ மீட்டருக்கு திட்டச் செலவான 18 கோடி ரூபாயில் இருந்து 250 கோடி ரூபாய் செலவழித்தது ஏன்?

இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் சுங்கச்சாவடி களில் விதிமுறைகளை மீறி பயணிகளிடம் 132 கோடி ரூபாய் வசூல் செய்யப் பட்டதே? ஆயுஷ்மான் பாரத் திட்டத்தில் 7% லட்சம் பயனாளிகளின் விவரங்கள், ஒரே தொலைபேசி எண் ணில் இணைக்கப்பட்டதை என்ன சொல்லி அழைப்பீர்கள்? அயோத்யா மேம்பாட்டுத் திட்டத்தில் ஒப்பந்த தாரர்களுக்குத் தேவையற்ற சலுகைகள் வழங்கப்பட்டதற்கு என்ன பெயர்? எச்.ஏ.எல். விமான எஞ்சின் வடிவமைப்பில் தவறு செய்ததால், 154 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டதற்கு பொறுப்பு? யார்? இதெல்லாம் ஊழல் இல்லாமல் வேறென்ன?

ஈரான் போரால் சமையல் எரிவாயு தட்டுப்பாடு அதி கரித்துக் கொண்டிருக்கிறது. மக்கள் இன்னலுக்கு ஆளாகாமல் தடுக்க தீவிரநடவடி க்கைகளை மேற் கொள்கிறார் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின். ஆனால், திருச்சியில் பேசிய மோடி இதையெல்லாம் வெறும் வதந்தி என்று எளிதாகக் கடந்து போகிறார்.

தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்லதிமுக.காங்கிரஸ் கூட்டணி இணைந்து செயல்படுகிறது. ஆனால், மிகவும் மோசமாக விமர்சித்த டி.டி.வி. தினகரன், அன்புமணி ராமதாஸ் ஆகியோருடன் சேர்ந்து பா.ஜ.க.வுடன் எந்த அடிப்படையில் எடப்பாடி பழனிசாமி கூட்டணி வைத்திருக்கிறார்? என்பதை மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும். மூவருமே செய்த ஊழல், முறைகேட்டிலிருந்து தப்பிக்கவே அடிமையாகி இருக்கிறார்கள்' என்பதே உண்மை

12 ஆண்டுகளாக தமிழ் நாட்டுக்கு துரோகம் மட்டுமே செய்துவிட்டு தேர்தல் நெருங்கும் நேரத்தில் திட்டங்களை தொடங்குவது கபட நாடகமின்றி வேறெ ன்ன? தகுதியுள்ள

1.31 கோடி குடும்பத் தலைவிகளுக்கு கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் கீழ், மாதம் ரூ.1,000 வழங்குகிறதுதிராவிட மாடல் அரசு. விடியல் பயணம் திட்டத்தின்கீழ் அரசுப் பேருந்துகளில் பெண்கள் கட்டணமில்லாமல் பயணம் செய்ய ஆண்டுக்கு சுமார் ரூ.2,500 கோடிக்கும் மேலாக அரசு மானியம் வழங்குகிறது. அரசுப் பள்ளிகளில் படித்து உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு புதுமைப்பெண் திட்டத்தின் மூலம் ரூ.1,000 வழங்கப்படுகிறது. இதற்காக ஆண்டுக்கு சுமார் ரூ.350 கோடிக்கும் மேல் நிதி ஒதுக்கப்படுகிறது. அரசுப் பள்ளிகளில் பயின்று உயர்கல்விசேரும் மாணவிகளின் சேர்க்கையை 34 சதவீதம் அதிகரித்துள்ளது. தொழில்முனைவோர் மகளிர் மேம்பாட்டுத் திட் டத்தின் கீழ், புதிய தொழில் தொடங்கும் பெண்களுக்கு 25 சதவீதம் மானியம் (ரூ.75 லட்சம் வரை) மற்றும் 3 சதவீதம் வட்டிச் சலுகையும் வழங்கப்படுகிறது. பெண்களின் சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டை பல்வேறு திட்டங்கள் மூலம் உறுதி செய்வதில் நாட்டிலேயே முன்னணியில் இருப்பது தமிழ்நாடே!

பெண்களுக்கான இதுபோன்ற திட்டங்களை உங்களால் சொல்ல முடியுமா? தமிழ்நாட்டு மக்களை உங்களால் ஒருபோதும் ஏமாற்ற முடியாது. இது தேசிய ஜனநாயக கூட்டணி அல்ல. தேசிய ஊழல் கூட்டணி என்பதைதான் திருச்சி மேடை சொல்கிறது. சந்தர்ப்பவாத கூட்டணிக்கு பாடம் புகட்ட தமிழ்நாட்டு மக்கள் தயாராகி விட்டார்கள்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

2026–2027 ஆம் ஆண்டுக்கான சிறப்பு நிலை விளையாட்டு விடுதி!

மாணவ / மாணவியர் சேர்க்கை விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது!

சென்னை,மார்ச்.15- தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கீழ் செயல்படும் சிறப்பு நிலை விளையாட்டு விடுதிகளில், கல்லூரிகளில் பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு அறிவியல் சார்ந்த பயிற்சி, தங்குமிடம் மற்றும் சத்தான உணவு வசதியுடன் விளையாட்டு பயிற்சி வழங்கப்படுகிறது.

2026-2027 ஆம் ஆண்டுக்கான சிறப்பு நிலை விளையாட்டு விடுதி மாணவ/மாணவிகளுக்கான சேர்க்கைக்கு 17 வயது முதல் 25 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும். 01.07.2001 அன்று அல்லது அதற்கு பின்னர் பிறந்தவராகவும், 01.07.2009 அன்று அல்லது அதற்கு முன்னர் பிறந்தவராகவும் இருக்க வேண்டும். 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்று கல்லூரிகளில் சேரும் மாணவ/ மாணவியர்கள் சிறப்பு விளையாட்டு விடுதிகளில் சேர்க்கப்படுவர்.

தேசிய, மற்றும் மாநில அளவிலான விளை யாட்டுப்போட்டிகளில் பதக்கங்கள் வென்ற மாணவ, மாணவியர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். முதுநிலை பட்டப்படிப்பு முதலாம் ஆண்டு படிப்பில் சேர்வதற்காக இளநிலை பட்டப்படிப்பை முடித்திருக்க வேண்டும். இளநிலைப் படிப்பின் போது சர்வதேச மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் பதக்கங்கள் வென்ற மாணவ, மாணவியர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

30.03.2026 அன்று காலை 7.00 மணிக்கு சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் ஆண் & பெண், தடகளம், பளுதூக்குதல், ஜுடோ, வாள்விளையாட்டு, கையுந்துபந்து, ஹாக்கி மற்றும் கால்பந்து ஆண்கள் பிரிவு ஆகிய விளையாட்டுகளுக்கான தேர்வுகள் நடைபெறும்.

மேலும் அதே நாளில் காலை 7.00 மணிக்கு சென்னை ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டரங்கத்தில் ஆண் & பெண், கூடைப்பந்து குத்துச்சண்டை கைபந்து மற்றும் கால்பந்து பெண்கள் பிரிவு ஆகிய விளையாட்டுகளுக்கான தேர்வுகள் நடைபெறும்.

விளையாட்டில் சிறந்து விளங்கும் மற்றும் ஆர்வமுள்ள மாணவ / மாணவியர்கள், சிறப்பு நிலை விளையாட்டு விடுதி சேர்க்கைக்கான ஆன்லைன் விண்ணப்பப்படிவத்தினை 13.03.2026 முதல் www.sdat.tn.gov.in என்ற இணையதள முகவரியில் ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்கலாம். ஆன்லைன் விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து சமர்ப்பிக்க கடைசி நாள்: 26.03.2026 அன்று மாலை 5.00 மணி ஆகும். ஆன்லைன் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

மேலும் தகவல்களுக்கு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் ஆடுகள தகவல் தொடர்பு மைய அலைப்பேசி 9514000777 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம். சிறப்பு விளையாட்டு விடுதியில் சேர விரும்பும் மாணவ / மாணவியருக்கான மாநில அளவிலான தேர்வுப் போட்டிகள் 30.03.2026 அன்று காலை 7.00 மணியளவில் கீழ்க்கண்ட இடங்களில் நடத்தப்பட இருப்பதால் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

தோழர் சாரங்கபாணி
மார்ச் 15 (1965)

மாயவரம் ஏ.வி.சி. கல்லூரியில் பயிலும் மாணவரான இவர், 1965ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 15ஆம் நாள் அன்று காலை கல்லூரிக்கு வந்து யாரும் காணாதபடி கல்லூரித் திடலில் தன்மீது மண்னெண்ணை ஊற்றித் தீயிட்டுக் கொண்டு, "இந்தி ஒழிக! தமிழ் வாழ்க!" என்று முழக்கமிட்டுக் கொண்டிருந்த போது, அவரது முழக்கத்தை கேட்ட மாணவர்கள் தீயை அணைக்க முயன்று தோல்வியுற்றனர். குற்றுயிராக உள்ள சாரங்கபாணி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு "தமிழ்த் தாய்க்கு என் உயிரைத் தந்துவிட்டேன்" என்று கூறி முடிக்கவும் உயிர் பிரிந்தது.

சாரங்கபாணி மாணவர் நடத்திய இந்தி எதிர்ப்பு ஊர்வலங்களை முன்னின்று நடத்தியவர். மாயவரம் ரெயில் நிலைய அறப்போராட்டத்தில் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.